# மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் 15.11.2025 அன்று சிவகங்கை மாவட்டத்தில், கலந்துகொண்ட அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளின் புகைப்படத் தொகுப்பு.



● சிவகங்கை, சிங்கம்புணரி தேர்வுநிலை பேரூராட்சியில் ரூ.1 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய அலுவலகக் கட்டடத்தைத் திறந்துவைத்தார்.



● சிவகங்கை மாவட்டக் கழகம் சார்பில், 125 மாற்றுத்திறனாளிகளுக்கு, இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட இருசக்கர வாகனங்களை வழங்கினார்.



● கோவிலூரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கொடிக்கம்பத்தில் கழகக்கொடியை ஏற்றிவைத்து உரையாற்றினார்.








● சிவகங்கை மாவட்டம், கிருங்காக்கோட்டையில் கழக முன்னோடி எஸ்.எஸ்.தென்னரசு அவர்களின் புதுப்பிக்கப்பட்ட வெண்கலச் சிலையைத் திறந்துவைத்து சிறப்புரையாற்றினார்.





● சிங்கம்புணரியில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட மோட்டார் வண்டிகள், செவித்திறன் கருவிகள், கைப்பேசி ஆகியவற்றை வழங்கினார்.









● சிங்கம்புணரியில் நடைபெற்ற விழாவில், பேரறிஞர் அண்ணா மன்றத்தைத் திறந்து வைத்து, முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் முன்னாள் அமைச்சர் செ.மாதவன் ஆகியோரின் முழு உருவச் சிலைகளையும், மறைந்த கழக முன்னோடி ஓ.பி.டி.சொக்கலிங்கம் அவர்களது திருவுருவப்படத்தையும் திறந்துவைத்து சிறப்புரையாற்றினார்.

● சிங்கம்புணரியில் நடைபெற்ற அரசு விழாவில், சுமார் 8,500 பயனாளிகளுக்கு ரூ.89 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி, ரூ.18 கோடி மதிப்பிலான 23 முடிவுற்ற திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.





● முன்னாள் அமைச்சர் மறைந்த செ.மாதவன் அவர்களின் மார்பளவு சிலையை, சிங்கம்புணரி பாரி வள்ளல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் திறந்துவைத்தார்.